எழும்பூர் மருத்துவமனை வளாகத்தில்

20 மரங்களுக்கு மறுவாழ்வு

சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை வளாகத்தில் வேருடன் பெயர்த்து மறுநடவு செய்யப்படும் மரம்.

சென்னை, டிச. 21: சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை வளாகத்தில் உள்ள 20-க்கும் மேற்பட்ட மரங்களை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி, வேருடன் பெயர்த்து மறுநடவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உலகிலேயே மிகப் பழைமையான இரண்டாவது கண் மருத்துவமனையான சென்னை எழும்பூர் கண் மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளின் வசதிக்காக 4 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டது. இதற்காக அந்த வளாகத்தில் உள்ள சுமார் 75 மரங்களை வெட்ட முடிவு செய்யப்பட்டது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மறுநடவு செய்தால் வளரும் வாய்ப்புள்ள மரங்களை வேறு இடத்தில் நட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, வளரும் வாய்ப்புள்ள மரங்கள் முதலில் இனம் காணப்பட்டு, அவற்றை மறுநடவு செய்யும் பணிகளில் அரசுடன் இணைந்து ஓசை சுற்றுச்சூழல் அமைப்பின் நிர்வாகி சையது மற்றும் ட்ரீ ஆம்புலென்ஸ் அறக்கட்டளை நிர்வாகிகள் பிரித்வி கிருஷ்ணன், அப்துல் கனி, சுரேஷ் ஜாதவ் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

மறுநடவு: இதுகுறித்து ஓசை சையது கூறுகையில், 'எழும்பூர் கண் மருத்துவமனை வளாகத்தில் முதற்கட்டமாக செய்யப்பட்ட ஆய்வில் அடர் வனப் பகுதியில் வளரக் கூடிய சுமார் 25 ஆண்டுகளான விலா மரம், தென்பூசணி மரங்களும், மஞ்சள் கொன்றை, வாகை உள்ளிட்ட மர வகைகளும் இங்குள்ளது தெரியவந்தது.

இதில், முதற்கட்டமாக 20-க்கும் மேற்பட்ட மரங்கள் மறுநடவு செய்யத் திட்டமிட்டு, இதற்கான பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டன. இந்த மரங்கள் அனைத்தும் வேருடன் பெயர்த்தெடுக்கப்பட்டு, மருத்துவமனை வளாகத்தில் உள்ள வேறொரு பகுதியில் நடப்படுகின்றன. இதனால், அவை நன்கு வளரவே அதிகம் வாய்ப்புள்ளது.

இதற்காக 10 அடி ஆழத்துக்கு குழிதோண்டி அதில், அந்த மரம் வளர்ந்த இடத்தின் தாய் மண், வேப்பம் புண்ணாக்கு, தென்னை நார்த்தூள், மண்புழு உரம், சாணம் ஆகியவற்றுடன் மறுநடவு செய்யப்படுகின்றன. இப்பணி விரைவில் நிறைவுபெறும் என்றார்.

கல்வியால் பெற்ற அறிவை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்

ஆளுநர் வேண்டுகோள்

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியின் பவள விழாவில், மலரை வெளியிட்ட ஆளுநர் பன்வாரிலால் புரோஹித். உடன், அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.கே.சூரப்பா, இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் என்.ஸ்ரீநிவாசன், அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் மீனாட்சி சுந்தரம், அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் வித்யா சங்கர் உள்ளிட்டோர்.

சென்னை, டிச. 21: கல்வியின் மூலம் பெற்ற அறிவை நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த மாணவர்கள் உறுதியேற்க என்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியின் பவள விழா சனிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பேசியது:

மத்திய அரசின் மேம்பட்ட கல்வி நிறுவன அந்தஸ்தை அண்ணா பல்கலைக்கழகம் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

நமது நாட்டில் சுமார் 60 கோடி பேர் 30 வயதுக்கு கீழ் உள்ளது தெரியவந்துள்ளது. இது போன்ற மிகப் பெரிய மனிதவளம் உலகில் எந்த நாட்டிலும் இல்லை.

இவர்களுக்கு முறையாகப் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பை உருவாக்கினால், மிகப் பெரிய அளவிலான வளர்ச்சியை நம்மால் எட்ட முடியும். கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

வளர்ந்து வரும் நமது நாட்டை வளரும் நாடாக மாற்றும் திறன் மாணவர்களிடம்தான் உண்டு. மாணவர்கள் கல்வியின் மூலம் பெற்ற அறிவை நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு உதவுதல் மற்றும் எளிமை ஆகிய எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற செயல்கள் மனதை என்றும் இளமையாக வைத்திருக்கும் என்றார்.

இந்த விழாவில், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் எம்.கே.சூரப்பா, இந்தியா சிமெண்ட்ஸ் மேலாண் இயக்குநர் என். ஸ்ரீநிவாசன், அழகப்பா பொறியியல் கல்லூரி முதல்வர் மீனாட்சி சுந்தரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தொழில் திறனை இளைஞர்கள் வளர்த்துக் கொள்வது அவசியம்

முன்னாள் கூடுதல் தலைமை செயலர் கண்ணன்

சென்னை, டிச. 21: திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்று இளைஞர்கள் தங்களது தொழில் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என தமிழக அரசின் முன்னாள் கூடுதல் தலைமை செயலர் ஆர்.கண்ணன் தெரிவித்தார்.

தமிழக அரசின் திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மங்கள்யான் தொழில்நுட்பத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் விழா அம்பத்தூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட தமிழக அரசின் முன்னாள் கூடுதல் தலைமை செயலர் முனைவர் ஆர். கண்ணன் சான்றிதழை வழங்கி பேசியது:

பட்டப்படிப்புகளை மட்டும் படிக்காமல், தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைக் கற்றுக்கொண்டால் அதற்குரிய பலன்களை உடனடியாக பெறலாம்.

வேலையில்லா இளைஞர்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் சேர்ந்து தொழில் தொடர்பான திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்குரிய பேச்சாற்றல் இருக்க வேண்டும் என்றால், பிற மொழிகளையும் கற்றுக்கொள்வது சிறந்தது என்றார்.

தொடர்ந்து, ஆன்வார்டு இ சர்வீசஸ் நிறுவனத்தின் முதுநிலை துணைத்தலைவர் ஏ. சங்கர், பயிற்சி நிறுவனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பயிற்சிப் பெற்ற அனைவருக்கும் அவர்களுடைய தகுதிக்கேற்ப பணி வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மத்திய அரசு உரத்தொழிற்சாலை முன்னாள் பொது மேலாளர் டி. சுந்தரசேகரன், முன்னாள் தமிழக அரசு சார்பு செயலாளர் எல்.ஆர். அழகிரிசுவாமி, மங்கள்யான் பயிற்சி நிலைய துணைத்தலைவர் பார்த்தசாரதி, மங்கள்யான் தொழில்நுட்ப தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் வி. கந்தசுவாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திமுக பேரணி: மக்கள் நீதி மய்யம் பங்கேற்காது

சென்னை, டிச.21: திமுக சார்பில் திங்கள்கிழமை நடைபெற உள்ள குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்கப் போவதில்லை என மக்கள் நீதி மய்யம் அறிவித்துள்ளது.

குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து வரும் திங்கள்கிழமை (டிச.23) திமுக சார்பில் பேரணி நடைபெற உள்ளது. இந்த பேரணியில் பங்கேற்குமாறு மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமலஹாசனுக்கு, திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், மக்கள் நீதி மய்யம் வெளியிட்டுள்ளச் செய்திக்குறிப்பில், 'கமலஹாசன் வெளிநாடு சென்றுள்ளதால், இந்தப் பேரணியில் கலந்து கொள்ள முடியவில்லை' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, திமுக நடத்தும் பேரணிக்கு அழைப்புக் கொடுத்தால் தாம் பங்கேற்பதாக கமலஹாசன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாப் & சிந்த் வங்கி (ஓர் இந்திய அரசு நிறுவனம்) மண்டல அலுவலகம் சென்னை-600 002.

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு

ரிசர்வ் வங்கியின் ஆணைக்கிணங்க, குறிப்பிட்ட கால இடைவெளியில் KYC புதுப்பிக்காத வாடிக்கையாளர்கள், KYC/PAN விண்ணப்பம் 60/61-னை 31.01.2020-தேதிக்கு முன்பாக தங்களின் வங்கிக் கிளையில் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் அவர்களின் வங்கிக் கணக்கானது முடக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தங்களின் வங்கிக் கிளையினை அணுகவும்

மண்டல மேலாளர்

ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா
காஞ்சிபுரம் கிளை
29 30, 30-B, அன்னை இந்திரா காந்தி தெரு, காஞ்சிபுரம்–631502.

நகைக்கடன் ஏல அறிவிப்பு

எமது கிளையில் தங்க நகைக்கடன் பெற்ற பின்வரும் நபர், தன்னுடைய கடன் பாக்கி செலுத்த தவறிவிட்டார். எனவே அவருடைய தங்க நகைகள் **30.12.2019 தேதி மாலை 4.00 மணிக்கு** எமது வங்கி கிளையின் வளாகத்தில் ஏலத்தில் விடப்பட இருக்கிறது.

வ.எண்	கணக்கு எண்	பெயர் மற்றும் முகவரி	மொத்த எடை
1.	36236701230	திரு. யோகேஷ். ரா த/பெ. திரு. ராஜேந்திரன். மு 34B, K.S. பார்த்தசாரதி தெரு, காமாட்சியம்மன் காலனி, ஓரிக்கை அஞ்சல், காஞ்சிபுரம்–631501.	50.8 கிராம்

தங்க நகைகள் ஏலத்தை நடத்துவதற்கு கிளை மேலாளரே அதிகாரபூர்வ அலுவலர் ஆவார். அவரது சொந்த விருப்பத்தின்படி ஏலத்தை ரத்து செய்யவோ (அல்லது) பின்வரும் தேதிக்கு ஒத்திப்போடவோ முடியும். மேற்குறிப்பிட்ட ஏல நடவடிக்கை விதிமுறை மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

தேதி : 22.12.2019
இடம் : காஞ்சிபுரம்

கிளை மேலாளர்
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, காஞ்சிபுரம் கிளை

எல்லைப்புற இராணுவத்தில் ஒரு அதிகாரியாக சேருங்கள்
(முன்னாள் இராணுவப்படையில் பொறுப்புரிமை அளிக்கப்பட்ட அதிகாரிகள் மட்டும்)
பகுதி நேர அர்ப்பணிப்பு மற்றும் முழு நேர தொழில் அல்ல!

எல்லைப்புற இராணுவ அதிகாரிகளாக (துறை சார்ந்தது அல்ல) நாட்டிற்கு சேவை செய்வதற்கு, முன்னாள் ஆயுதப் படைகளில் பொறுப்புரிமை கொண்ட அதிகாரிகளாக மதிப்புமிக்க பணியாற்றிவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நுழைவுத்தகுதியின் நிபந்தனைகள்

- முன்னாள் இராணுவ அதிகாரி மட்டும் விண்ணப்பிக்கலாம்.
- தேசிய இனம்: இந்தியக் குடிமகன் (ஆண் மற்றும் பெண்).
- வயது வரம்புகள் : விண்ணப்பத் தேதி அன்று 18லிருந்து 42 ஆண்டுகள்.
- கல்வித் தகுதிகள்: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம்.
- உடற் தகுதி நிலைகள்: ஒரு விண்ணப்பதாரர் உடலியல் ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் எல்லா வகையிலும் பொருத்தமுள்ளவராக இருக்க வேண்டும்.
- வேலை வாய்ப்பு: மதிப்புமிக்க வகையில் பணியாற்றியவர்.
- நேர்முகத் தேர்வின் தேதி : ஏப்பிரல் 2020 (உறுதியான தேதிகள் பின்னர் அஞ்சலில் தெரிவிக்கப்படும்).
- விண்ணப்பம் பெற இறுதித் தேதி : **31 ஜனவரி 2020.** (எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 31 ஜனவரி 2020 வரை, எல்லைப்புற இராணுவம் கூடுதல் இயக்குநரகம், பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த தலைமையகங்கள், 'L' பிளாக், சர்ச் சாலை, புதுதில்லி-110001)
- விண்ணப்பப் படிவம் மற்றும் மற்ற விவரங்கள் எல்லைப்புற இராணுவ அதிகாரப்பூர்வ வலைதளம் www.jointerritorialarmy.gov.in.-ல் கிடைக்கும் விளம்பரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. விரிவான விளம்பரம் இந்த மாத வேலை வாய்ப்பு செய்திகளிலும் பிரசுரிக்கப்படும்.
- பூர்த்தி செய்யப்படாத / தகுதியற்ற விண்ணப்பப்பப் படிவம் மற்றும் **31 ஜனவரி 2020**க்குப் பிறகு பெறப்படும் படிவம் எந்த தகவலுமின்றி நிராகரிக்கப்படும்.
- சிவிலியன் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பப்படிவம் ஏற்கப்படாது மற்றும் தகவல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

davp 10120/11/0006/1920

தமிழ் இசைச் சங்கம், சென்னை
தொலைபேசி : 25341425 / 25341958 / 25330350

பண் ஆராய்ச்சியின் எழுபதாம் கூட்டம்

2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22, 23, 24, 25-ம் நாட்கள்
இடம் : இராஜா அண்ணாமலை மன்றம்

நிகழ்ச்சி நிரல்

22-12-2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மணி 10 - 1 வரை

வரவேற்புரை :
குஜராத் மாநில உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நடுவர்
டாக்டர் மாண்புமிகு **பு.ரா. கோகுலகிருஷ்ணன்** அவர்கள்
தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை

தொடக்கவுரை :
இசைப் பேரறிஞர் டாக்டர் **பத்மா சுப்ரமணியம்** அவர்கள்

நன்றியுரை :
திரு. ஏ.சி. முத்தையா அவர்கள்
மதிப்பியல் செயலர், தமிழ் இசைச் சங்கம், சென்னை

தமிழ் இசைக் கல்லூரி நாட்டியத்துறை மாணவியர் வழங்கும்
"சங்கத் தமிழ்" நாட்டிய நாடகம்

23-12-2019 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 1.00 மணி வரை

பண் : கொண்டற்கிரி
முன்னுரை : **ஆ. ராஜேந்திரன்** அவர்கள்
கட்டுரை படித்து விளக்கம் கூறிப் பாடிக் காட்டுபவர் :
திருமதி **கு. செல்வஜெயந்தி** அவர்கள்
குரலிசை விரிவுரையாளர், தமிழ் இசைக் கல்லூரி, சென்னை

பண் : இராமக்கிரி
முன்னுரை : முனைவர் **வே.வெ. மீனாட்சி** அவர்கள்
முதல்வர், தமிழ் இசைக் கல்லூரி, சென்னை
கட்டுரை படித்து விளக்கம் கூறிப் பாடிக் காட்டுபவர் :
திரு. **பா. சற்குருநாதன் ஓதுவார்** அவர்கள்
தலைமை ஓதுவார், கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை

24.12.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 1.00 மணி வரை

பண் : நோதிறம்
முன்னுரை : முனைவர் திருமதி **பாகீரதி** அவர்கள்
இசைத் துறைத் தலைவர் (ஓய்வு), இராணி மேரி கல்லூரி
கட்டுரை படித்து விளக்கம் கூறிப் பாடிக் காட்டுபவர் :
இசை பேரறிஞர் டாக்டர் **சீர்காழி ஜி. சிவசிதம்பரம்** அவர்கள்
இசைப் பேரறிஞர் **எம்.எம். தண்டபாணி தேசிகர்** அவர்களின் **"இசைப் பயணம்"**

25.12.2019 புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 1.00 மணி வரை

பண் : மாதுங்க ராகம்
முன்னுரை : முனைவர் **கற்பகம்** அவர்கள்
துறை தலைவர், இசைத் துறை, தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
கட்டுரை படித்து விளக்கம் கூறிப் பாடிக் காட்டுபவர் :
கலைமாமணி திரு. **டி.கே.எஸ். கலைவாணன்** அவர்கள்
இசைப் பேரறிஞர் **மதுரை சோமு** அவர்களின் **"இசைப் பயணம்"**

முடிப்புரை :
பண் இசைப்பேரறிஞர் அம்பாசமுத்திரம் திரு. **ஆர். பாலசுப்பிரமணிய ஓதுவார்** அவர்கள்

நன்றியுரை :
குஜராத் மாநில உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நடுவர்
டாக்டர் மாண்புமிகு **பு.ரா. கோகுலகிருஷ்ணன்** அவர்கள்
தலைவர், தமிழ் இசைச் சங்கம், சென்னை

வாழ்த்து

குறிப்பு : மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் கட்டணம் இல்லை

ஸ்ரீதேவி பைன் ஆர்ட்ஸ்
PT.தியாகராயாஹால் A/c
(முருகன் இட்லி கடை எதிரில்) GN செட்டி ரோடு, தி.நகர்.
TODAY 7 PM
கிரேஸி கதை வசனத்தில்...
காமெடி ஸ்டார் மாது பாலாஜி நடிக்கும்...
கிரேஸி பிரிமியர் லீக்
CPL
டிக்கட்டுகள் இன்று காலை 10 மணி முதல் ஹாலில் கிடைக்கும்
9841052165
New Membership Open Today
www.bookmyshow.com

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி
ஆன்மீகச் சிறிர்ப்பு
ஜோதிடச் சிறப்பு
இரண்டும் இணைந்த வண்ண இணைப்பு

படிவம்-G
விருப்ப வெளியீட்டுக்கான அழைப்பிதழ் (EOI)
(இன்சால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி (பெருநிறுவனதாரர்களுக்கான திவால் அறிவிக்கை நடைமுறை) ஒழுங்குமுறைகள் 2016, ஒழுங்குமுறை 36A(1)-இன் கீழ்)

தொடர்புடைய விவரங்கள்		
1	பெருநிறுவனக் கடன்தாரர் பெயர்	**ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்**
2	பெருநிறுவனக் கடன்தாரர் வணிகம் தொடங்கிய நாள்	01.04.1992
3	பெருநிறுவனக் கடன்தாரரின் வணிகம் பதிவு செய்யப்பட்டது / தொடங்கப்பட்டது	பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், RoC-மும்பை
4	பெருநிறுவனக் கடன்தாரரின் பெருநிறுவன அடையாள எண் / நிறுவனப் பொறுப்புக்கூறல் அடையாள எண்	L99999MH1992PLC066213
5	பெருநிறுவனக் கடன்தாரரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு அலுவலகம்: சிரோயா மையம், சாகர் விமான நிலையச் சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை – 400099 முதன்மை அலுவலகம்: ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட், குளோபல் ஒன், 3ஆவது தளம், 252, LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை-400070
6	பெருநிறுவனக் கடன்தாரரின் திவால் நடைமுறை தொடக்க நாள்	20.06.2019
7	விருப்ப வெளியீட்டுக்கான அழைப்பிதழ் (EOI) நாள்	22.12.2019 (2ஆவது சுற்று) நாளிதழ் விளம்பரம் மற்றும் நிறுவன இணையத்தளம் ஆகியவையும் சேர்க்கப்பட்டுள்ளன
8	குறியீட்டின் பிரிவு 25(2)(h)-இன்படி அறிவிக்கை விண்ணப்பதாரர்களுக்கான தகுதி வரையறை பற்றி அறிய அணுகுக:	தகுதி வரையறை விவரங்கள் குறிப்பிடப்பட்ட விருப்ப வெளியீட்டு நடவடிக்கை ஆவணம் www.jetairways.com இணையத்தளத்தில் கிடைக்கும் அல்லது பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிப் பெறலாம்: fly.JetAirways@in.gt.com
9	பிரிவு 29A-இன்படி தகுதியின்மைக்கான நெறிமுறைகள் பற்றி அறிய அணுகுக:	IBBI-இன் இணையத்தளத்தில் (https://ibbi.gov.in/legal-framework/) கிடைக்கும் அல்லது பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிப் பெறலாம்: fly.JetAirways@in.gt.com
10.	விருப்ப வெளியீடுகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்	06.01.2020
11.	அறிவிக்கை உத்தேச விண்ணப்பதாரர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	09.01.2020
12	தற்காலிகப் பட்டியல் குறித்த ஆட்சேபணைகளை சமர்ப்பிக்கக் கடைசி நாள்	14.01.2020
13	அறிவிக்கை உத்தேச விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	17.01.2020
14	அறிவிக்கை உத்தேச விண்ணப்பதாரர்களுக்கு தகவல் நினைவுக்குறிப்பு, மதிப்பீட்டு அட்டவணை, அறிவிக்கைத் திட்டங்கள் ஆகியவை அனுப்பப்படும் நாள்	09.01.2020
15.	அறிவிக்கைத் திட்டத்துக்கான கோரிக்கை, மதிப்பீட்டு அட்டவணை, தகவல் நினைவுக்குறிப்பு, மேல் விவரங்கள் ஆகியவை பெறப்படும் முறை	தகுதியும் ஆர்வமும் உள்ள அறிவிக்கை விண்ணப்பதாரர்களுக்கு மின்னணு வடிவில் அனுப்பப்படும்
16.	அறிவிக்கைத் திட்டங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்	08.02.2020
17.	அறிவிக்கை அலுவலரிடம் அறிவிக்கைத் திட்டங்களை சமர்ப்பிக்கும் முறை	மூடி முத்திரையிட்ட கடித உறை வடிவில் அஞ்சலிலும் / நேரிடையாகவும் கூடவே மின்னணுப் பதிப்பாகப் பென்டிரைவிலும் அறிவிக்கை அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்
18.	அறிவிக்கைத் திட்டங்களை ஒப்புதலுக்காகத் தீர்ப்பு ஆணையரிடம் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள நாள்	28.02.2020
19.	அறிவிக்கை அலுவலரின் பெயர் மற்றும் பதிவு எண்	ஆஷிஷ் சௌச்சாரியா IBBI/IPA001/IP-P00294/2017-18/10538
20.	வாரியத்தில் பதிவு செய்துள்ளபடி அறிவிக்கை அலுவலரின் பெயர், முகவரி மற்றும் மின்னஞ்சல்	ஆஷிஷ் சௌச்சாரியா, முகவரி: கிராண்ட் தார்ன்ட்டன், 10C ஹங்கர்ஃபோர்டு தெரு, கொல்கத்தா - 700017, **மின்னஞ்சல்: asish.chhawchharia@in.gt.com**
21	அறிவிக்கை அலுவலரோடு தொடர்பு கொள்வதற்கான முகவரி மற்றும் மின்னஞ்சல்	ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட், குளோபல் ஒன், 3ஆவது தளம், 252, LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை-400070, **மின்னஞ்சல்: fly.JetAirways@in.gt.com**
22.	மேலும் விவரங்கள் அறிய அணுகுக:	பெருநிறுவனக் கடன்தாரரின் www.jetairways.com இணையத்தளத்தில் அல்லது பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிப் பெறலாம்: **fly.JetAirways@in.gt.com**
23.	படிவம் G வெளியிடப்பட்ட நாள்	22.12.2019 (2ஆவது சுற்று)

ஒ/ம்-
ஆஷிஷ் சௌச்சாரியா
(IBBI/IPA001/IP-P00294/2017-18/10538)
அறிவிக்கை அலுவலர்
ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்டுக்காக
மின்னஞ்சல்: RP.JetAirways@in.gt.com
IBBI-இல் பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி
கிராண்ட் தார்ன்ட்டன், 10C ஹங்கர்ஃபோர்டு தெரு, கொல்கத்தா - 700017
மின்னஞ்சல்: asish.chhawchharia@in.gt.com

நாள்: 22.12.2019
இடம்: மும்பை

SMART B2B Ads

கல்வி

success academy tambaram enlightening future
No.1, Centre for Coaching TET & TRB Exams in Chennai
STATE RANKS in TRB-PG 2019 Exams
TRB POLYTECHNIC LECTURER
Coaching Classes for Engg/ non Engg. Subjects
BEO
Classes Are Going On
PG TRB – 2019 (Physics) State Rank 11 MRS. N. RHAMADEVI 19PG041200086
PG TRB – 2019 (CI) State Rank 20 MRS. S. CHITRA 19PGCI1103069
Online Tests
Coaching Venue
Sri Ayyasamy Ayyar High School
Ayyasamy School Street (Near MIT Gate)Nehru Nagar, Chrompet, Chennai- 600 044
97908 25923
97908 25927
044 - 42874329
www.successacademy.org.in

வரைதல் & ஓவியம்

AN ISO 9001 : 2015 CERTIFIED INSTITUTION
வெற்றிகரமான 35-ம் ஆண்டில்
Drawing and Painting
சிறுவர் சித்திரப் பயிற்சி
CHILDREN'S ART COURSE
வீட்டில் இருந்தபடியே படிக்கலாம்
ஓவியம் வரையக் கற்றுக் கொள்ளுங்கள்!
விவரப் புத்தகம் இலவசம்
உங்கள் முகவரியை போனில் சொல்லுங்கள். அல்லது SMS அனுப்புங்கள்
www.ajanthaschoolofarts.com
இணைய தளத்திலும் விவரபுத்தகத்தைப் பார்க்கலாம், படிக்கலாம், பதிவிறக்கம் (Download) செய்யலாம்
AJANTHA SCHOOL OF ARTS
(GOVT. REGD NO: 1075/99/MS/RD)
Ph : 044 - 26490363 / Cell : 99403 90708
No.6, Muthu Nagar, Poonamallee, Chennai - 600 056.

ரியல் எஸ்டேட்

BLB PLEDGED TO ETHICS
வண்டலூர்
DTCP அங்கீகாரம் பெற்ற மனைகள்
ஸ்ரீமத் ராமானுஜர் டவுன்
வண்டலூர் – கேளம்பாக்கம் சாலை
குபேரன் கோவில் அருகில்
Approval No. 6/2017
இதர மனைப்பிரிவுகள்
தாம்பரம் மேற்கு | ஆவடி – பட்டாபிரம் அருகில்
ECR - செங்கல்பட்டு அருகில்
• சுத்தமான பத்திரம் • நம்பிக்கையான நிறுவனம்
மனையைப் பார்வையிட அழைக்கவும்
காலை 7 மணி, 11 மணி மற்றும் மாலை 3 மணி
கடன் வசதி: Indiabulls
மனை. மங்களம். மகிழ்ச்சி.
BLB ESTATES PRIVATE LIMITED
28345104 (4 Lines)
9444126324
contact@blbestates.com
www.blbestates.com
22 YEARS OF SPREADING PROSPERITY
நன்மதிப்பில் முதல்டு

கல்வி

JSR IAS ACADEMY East Tambaram
இலவச TNPSC வகுப்புகள்
TNPSC GROUP - I / II / IIA தேர்விற்காக
JSR IAS ACADEMY நடத்தும்
200 வினாக்கள் அடங்கிய பொது அறிவு தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 10% மாணவர்களுக்கு இலவச பயிற்சியும், அடுத்த 10% மாணவர்களுக்கு பயிற்சி கட்டணத்தில் 50% தள்ளுபடியும் வழங்கப்படும்.
தேர்வு நாள்: 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
இடம்: JSR IAS Academy,
101A, Bharathamatha Street, East Tambaram, Chennai-59.
(Near Tambaram Sanatorium Railway Station)
முன்பதிவிற்கு
CALL 735 800 1586
735 800 1587